செய்தி வெளியீடு எண் : 553

நாள்: 03.11.2015

# செய்தி வெளியீடு

## அறிவியல் நகரம்,

தமிழ்நாடு அரசு, சென்னை

2.11.2015

அறிவியல் நகரம் 19.11.2015 அன்று ‘‘தோட்டக்கலை மற்றும் இயற்கை உரம் தயாரிப்பு’’ தொடர்பாக ஒரு நாள் பயிற்சி பட்டறையினை அறிவியல் நகரத்தில் நடத்த திட்டமிட்டுள்ளது. இப்பயிலரங்கில் தோட்டம் அமைக்கும் முறைகள், மண் மற்றும் நீர் நிர்வாகம், நிர்வாக முறைகள், உரமிடுதல், களைக்கட்டுப்பாடு, பூச்சி மற்றும் நோய் நிர்வாகம், அறுவடை செய்தல், கூரைத் தோட்டம் அமைக்கும் முறைகள், பயிரிடக் கூடிய தாவரங்களை தேர்வு செய்யும் முறைகள், பல்வேறு வகையான உணவு காளாண்களை வளர்க்கும் முறைகள், வணிக ரீதியாக மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள், தயாரித்த உரங்களை சேமிக்கும் முறை மற்றும் பாதுகாத்தல், உள்ளரங்குகளில் அலங்காரச் செடி வளர்ப்பும் அதன் பராமரிப்பும் போன்ற பல விரிவுரைகளை தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தின் (அண்ணாநகர், சென்னை பிரிவு) பேராசிரியர்கள் விரிவுரையாற்ற உள்ளார்கள். இப்பயிற்சி பட்டறைக்கு வரும் மக்களுக்கு கல்வித்தகுதி, வயது வரம்பு இல்லை. இலவசமாக 100 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்பதிவு செய்து கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்: 044–24454054 /`034

துணைத்தலைவர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9